# PSLE HIGHER TAMIL LANGUAGE (0017)

# For Examination from 2017

## 1. மதிப்பீட்டின் நோக்கங்கள்

தொடக்கப்பள்ளிகளில் உயர்தமிழ் கற்பிக்கப்படுவதன் நோக்கம் தமிழ்மொழியில் திறனும் ஆர்வமும் உடைய மாணவர்களின் கற்றல் தேவைகளை நிறைவேற்றுவதே ஆகும். எனவே உயர்தமிழ்த் தேர்வு உயர் சிந்தனைத் திறன்களைச் சோதிக்கும் வகையில் அமைந்துள்ளது. படித்தல் மற்றும் எழுதுதல் ஆகிய இரு மொழித்திறன்களை மதிப்பிடும் நோக்கத்தோடு உயர்தமிழ்த் தேர்வுத்தாள் வடிவமைக்கப்பட்டுள்ளது.

உயர்தமிழ்த் தேர்வின் மதிப்பீட்டு நோக்கங்கள் பின்வருமாறு:

- பலவிதமான பனுவல்களை ஆழ்ந்து படித்துத் தம் புரிந்துணர்வைப் புலப்படுத்தும் வகையில் உயர் சிந்தனைத் திறன்களை அடிப்படையாகக்கொண்டு அமைந்த வினாக்களுக்கு இலக்கணப் பிழைகளின்றி விடையளித்தல். எடுத்துக்காட்டாக,
    - ஊகித்தறிதல்
    - காரணகாரியத்தைக் கண்டறிதல்
    - கருத்துகளுக்குக்கிடையே உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை அறிதல்
    - ஒரு கருத்து சரி அல்லது தவறு என்பதைக் காரணங்களோடு விளக்குதல்
    - மையக் கருத்தை அல்லது முக்கியக் கருத்துகளை அடையாளங்காணுதல்

- பனுவல்களில் இடம்பெற்றுள்ள அருஞ்சொற்களுக்கு இடம்நோக்கிப் பொருள் அறிதல்

- கொடுக்கப்படும் கட்டுரைத் தலைப்புக்கு ஏற்ற கருத்துகளையும் தமது எண்ணங்களையும் சரியாகவும் பொருத்தமாகவும் எழுதுதல். தெளிவான மொழிநடையில் பொருத்தமான பலதரப்பட்ட சொற்கோவையைப் பயன்படுத்தி நிரல்படவும் பத்தி அமைப்போடும் கருத்துத் தொடர்ச்சியோடும் கட்டுரையைப் பிழையற எழுதுதல்

## 2. தேர்வு அமைப்புமுறை

இத்தேர்வு மொத்தம் இரண்டு வினாத்தாள்களைக் கொண்டது.

**<u>வினாத்தாள் 1: கட்டுரை</u>**
**(50 நிமிடங்கள், 40 மதிப்பெண்கள், 40%)**

இவ்வினாத்தாளில் இரண்டு வினாக்கள் இடம்பெறும். அவற்றுள் ஒன்று தலைப்பும் சூழலும் கொண்டு அமையும். மற்றொன்று தொடக்க வரிகளைக் கொண்டு அமையும். இவ்விரண்டு வினாக்களுள் மாணவர் ஏதேனும் ஒன்றினைப் பற்றி 150 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுதவேண்டும்.

**<u>வினாத்தாள் 2: மொழிப் பயன்பாடும் கருத்தறிதலும்</u>**
**(1 மணி 20 நிமிடங்கள், 60 மதிப்பெண்கள், 60%)**

இவ்வினாத்தாளில் மொழிப் பயன்பாடு, கருத்தறிதல் ஆகியவற்றையொட்டி மொத்தம் 23 வினாக்கள் இடம்பெறும். மாணவர் அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவேண்டும்.

இவ்வினாத்தாள் ‘அ’, ‘ஆ’, ‘இ’ ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியது.

**‘அ’ பிரிவு (மொழிப் பயன்பாடு)**

இப்பிரிவில் ‘பிழை திருத்தம்’, ‘வாக்கியங்களை முடித்தெழுதுதல்’ ஆகிய தலைப்புகளில் பத்து வினாக்கள் இடம்பெறும். ‘பிழை திருத்தம்’ என்னும் தலைப்பின்கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள பகுதியில் கோடிட்ட ஐந்து பிழையான சொற்களைத் திருத்தி அச்சொற்களின் சரியான வடிவத்தை எழுதவேண்டும். ‘வாக்கியங்களை முடித்தெழுதுதல்’ என்னும் தலைப்பின்கீழ் இடம்பெறும் ஐந்து வாக்கியங்களைப் பொருத்தமான சொற்களைக் கொண்டு முடித்தெழுதவேண்டும். அவ்வாறு முடிக்கப்பெறும் வாக்கியங்கள் ஒவ்வொன்றும் அதற்கு முந்திய வாக்கியத்தின் கருத்தையே கொண்டிருக்கவேண்டும்.

**‘ஆ’ பிரிவு (கருத்தறிதல் 1)**

இப்பிரிவில் கதையையொட்டி இடம்பெறும் வாசிப்புக் கருத்தறிதலில் உயர் சிந்தனைத் திறன்களையும் சொல்வளத்தையும் சோதிக்கும் வகையில் ஆறு வினாக்கள் இடம்பெறும். இவ்வினாக்களுள் நான்கு சுயவிடை வினாக்களாகவும் இரண்டு சொற்பொருள் வினாக்களாகவும் அமையும். இரண்டு சொற்பொருள் வினாக்களின் பொருளை உணர்த்தும் சொற்களைக் கருத்தறிதல் பகுதியிலிருந்து அடையாளங்கண்டு எழுதவேண்டும்.

**‘இ’ பிரிவு (கருத்தறிதல் 2)**

இப்பிரிவில் ஓர் உரைநடைப் பகுதியையொட்டி இடம்பெறும் வாசிப்புக் கருத்தறிதலில் உயர் சிந்தனைத் திறன்களையும் சொல்வளத்தையும் சோதிக்கும் வகையில் ஏழு வினாக்கள் இடம்பெறும். இவ்வினாக்களுள் ஆறு சுயவிடை வினாக்களாகவும் ஒன்று சொற்பொருள் வினாவாகவும் அமையும்.

## 3. தேர்வு விவர அட்டவணை

### தொடக்கப்பள்ளி இறுதித் தேர்வு
### உயர் தமிழ் (0017)

| **தாள் (நேரம்)** | **பொருளடக்கம்** | **வினா வகை** | **வினாக்களின் எண்ணிக்கை** | **மதிப்பெண் (மதிப்பளவு)** |
|---|---|---|---|---|
| 1<br><br>(50 நிமிடங்கள்) | **கட்டுரை**<br>[150 சொற்களுக்குக் குறையாமல்]<br><br>1. தலைப்பு<br>(சூழல் கொடுக்கப்படும்)<br><br>2. கதை<br>(தொடக்க வரிகள் கொடுக்கப்படும்) | கட்டுரை | 2<br><br>(ஒரு வினாவிற்கு விடையளித்தல்) | **40 (40%)** |
| 2<br><br>(1 மணி 20 நிமிடங்கள்) | **மொழிப் பயன்பாடும் கருத்தறிதலும்**<br><br>**'அ' பிரிவு**<br>1. பிழை திருத்தம்<br><br>2. வாக்கியங்களை முடித்தெழுதுதல் | <br><br><br><br>சுயவிடை<br><br>சுயவிடை | 23<br><br><br><br>5<br><br>5 | **60 (60%)**<br><br><br><br>10(10%)<br><br>10 (10%) |
| | **'ஆ' பிரிவு**<br>3. கருத்தறிதல் 1 | சுயவிடை | 6 | 16 (16%) |
| | **'இ' பிரிவு**<br>4. கருத்தறிதல் 2 | சுயவிடை | 7 | 24 (24%) |